பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சங்க காலத்தில் நெசவு தொழில்நுட்பம்

**முனைவர்.பிளசிங் இதழ் த.ஓ**
**உதவிப்பேராசிரியர்.**
**புனித அன்னை தெரசா பொறியியல் கல்லூரி**
**வாகைக்குளம், தூத்துக்குடி.**

11

**ஆய்வுச் சுருக்கம்:**

நாகரிகம் தோன்றுதற்கு முன்பு மனிதன் மலைகளிலும் காடுகளிலும், அலைந்துத் திரிந்து நாடோடி வாழக்கை வாழ்ந்து வந்தான். காலப்போக்கில் ஆற்றங்கரையோரத்தில் நிலையான வாழ்க்கையை மேற்கொண்டான். அவர்களின் நாகரீக வாழக்கையின் தொடக்கமாகவே வேளாண்மை அமைந்தது. உணவிற்காக விவசாயம் செய்யத் துவங்கிய மனிதன் காலப்போக்கில் பருத்தியை பயிர்ச் செய்யத் துவங்கினான். பருத்தி பஞ்சனைக் கண்ட மனிதன், பறவைகள், சிலந்தி போன்ற உயிரினங்கள் வலைப்பின்னுவதைப் பார்த்து ஆடையை நெய்யவும் கற்றுக் கொண்டான். சங்க இலக்கியங்கள் தமிழ் மொழியின் தொன்மையும், அக்கால மக்களின் வாழ்க்கை முறையும் எடுத்துக் கூறுவதோடு, சங்க கால மக்களின் தொழில் நுட்பம் பற்றிய செய்திகளையும் எடுத்துரைக்கிறது. சங்கப் பாடல்களில் நெசவு தொழில் நுட்பம் பற்றி செய்திகளும் இடம்பெற்றுள்ளது.

**முன்னுரை:**

தமிழர்களின் தொன்மையான வரலாற்றைத் தாங்கி நிற்பவை சங்க இலக்கியங்களாகும். சங்க இலக்கியங்கள் வாயிலாக மக்களின் வாழ்வியலையும் தமிழரின் தொழில்திறன்களைப் பற்றியும் அறியலாம். வேளாண்மையே நாகரீகத்தின் தொடக்கமாக இருந்தது. வேளாண்மையில் பருத்தி கிடைத்தது. பருத்திப் பஞ்சனைக் கொண்டு ஆடை நெய்யும் அறிவினை பண்டைய மக்கள் அறிந்து வைத்திருந்தனர். நெசவுத் தொழில் என்பது பலரது கூட்டு முயற்சியால் உருவான தொழிலாக இருந்தது. மக்களின் பல்வேறு நுண்ணறிவின் திறத்தால் ஆடைகள் உருவாக்கப்பட்டது. சங்க காலத்தில் நெசவுத் தொழில் நுட்பம் எவ்வாறு சிறந்திருந்தது என்பதை இவ்வாய்வில் மூலம் காண்போம்.

**நெசவுத் தொழில் விளக்கம்:**

வேட்டி, புடவை அல்லது துண்டு போன்ற உடைகளைத் தயாரிக்கும் தொழில் நெசவுத் தொழில்.

மக்கள் பயன்படுத்தும் (அ) உடுத்தும் உடையான ஆடை, பருக்கை விரிப்பான பாய், கம்பளி மற்றும் சாக்கு உற்பத்தி செய்வதற்கு உதவும் தொழில் நுட்பம் ஆகும்.

**நெசவுத் தொழிலின் தொன்மை:**

பழந்தமிழர் நாகரீகம் தொன்மையானது. மனித நாகரீகத்தின் வளர்ச்சியாக சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டது. மனித வேளாண்மையின் வளர்ச்சியாக பருத்தி கிடைத்தது. பஞ்சினைக்

கொண்டு ஆடை நெய்யும் அறிவினைப் பண்டைய மக்கள் அறிந்திருந்தனர். பருத்தி என்னும் செம்பொருள் இந்தியாவிற்குரியது என்பதை வேற்று நாட்டார் குறிப்புகளும், பிறநாட்டுத் தொல்லியல் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. உலகில் மற்ற நாடுகள் நாகரீகம் அடையும் முன்னரே, இந்திய மக்கள் பருத்திக் கொண்டு ஆடையை உற்பத்தி செய்து நெய்யக் கற்றுக் கொண்டனர்.

சங்க காலத்தில் பருத்தி பயிர் செய்வதும், நூல் நூற்பதும், ஆடை நெய்வதும், ஆடை விற்பதும் பெரிய அளவில் தொழிலாக நடந்திருக்கிறது. வணிகர், அரசர் போன்ற செல்வந்தர்கள் பட்டாடை அணிந்து மதிப்புடன் விளங்கினர்.

பருத்தியிலிருந்து பஞ்சும், பஞ்சிலிருந்து ஆடையும் உருவாக்கப்படுகிறது. பருத்திச் செடிகள் ஊருக்குப் புறந்தேயும் வீட்டிற்கு வெளியேயும் வளர்க்கப்பட்டன. போர்ச் சூழல் நிரம்பிய அக்காலத்தில் நாட்டின் மானம் காக்கவும், பெண்களின் மானம் காக்கவும் கை கொடுத்து உதவியது பருத்திச் செடியே, இதனை

**‘ பன்னல் வேலி இப்பணை நல்ஊரே ’**

**(புறம் 35.20)**

இப்பாடல் ஊருக்கு வெளியே பரந்து விரிந்துள்ள பருத்திச் செடிகள் ஊருக்குள் வேலிபோல் விளங்கியதை குறிப்பிடுகிறது. மேலும் கற்;கள் சூழ்ந்த பகுதியில் விளைந்துள்ள கோழிலை பருத்திப் பற்றி அகப்பாடல்,

**‘ கல் சேர்பு இருந்த கதுவாய்க் குரம்பைத்**
**தாழி முதற் கலித்த கோழிலைப் பருத்தி’**

**(அகம் 129: 6-7)**

என்னற பாடலடிகள் கோழிலை பருத்தி பற்றி குறிப்பிடுகிறது.

**பருத்தியினைச் சுத்தம் செய்தல்:**

பஞ்சினை நெய்வதற்கு ஏற்ற நூலாக மாற்ற வேண்டிப் பல்வேறு நிலைகளில் தூய்மைப்படுத்தினர். விதை, தேவையற்ற அழுக்குகள் போன்றவற்றை நீக்கி நூல் இழைக்கு நூற்பதற்கு ஏற்றவாறு மாற்றம் செய்தனர். இதனை,

**‘வில்லெறி பஞ்சின் மல்கு திரை’**

**(நற்:299)**

மேலும் கைம்பெண்கள், பருத்தி இழையிலிருந்து விதைகளை பிரித்தெடுக்க இரும்பினால் செய்யப்பட்ட தாள் மற்றும் வில் முதலான கருவினைப் பயன்படுத்தினர். இதனை,

**‘ஆள் இல் பெண்டிர் தாளின் செய்த**
**நுணங்கு நுண் பனுவல் போல்’**

**(நற் 353 : 1-2)**

**‘எஃகுறு பஞ்சிற்று ஆகி’**

**(நற் 247 : 4)**

இப்பாடல்களின் வாயிலாக வில், எஃகு போன்ற கருவிகளைப் பயன்படுத்தி பஞ்சினை தூய்மைச் செய்ததினை அறிந்துக்கொள்ள முடிகிறது.

வில்லைக் கொண்டு அடிக்கப்பட்ட பஞ்சானது, கடல் அலை கரையில் கொண்டு வந்து சேர்ந்த கடல் நுரையோடு ஒப்பிடப்படுகிறது. கடல் நுரையானது பொங்கிப் பெருகி நிறைந்திருப்பதைப் போல அடிக்கப்பட்டப் பஞ்சு இருப்பதால் 'பஞ்சை பொங்கல்' அன்று அழைத்துள்ளனர். பஞ்சினை மேகத்திற்கு உவமையாக கூறப்படுகிறது. இதனை,

**'பெய்து புறந்தந்து பொங்கல் அடிவீண்டுச்**
**சேர்ந்த வெண்மழை போல'**

**(பட்டின.பா.55: 14-15)**

பருத்திப் பெண்டிர் வில் கொண்டு பிரித்து எடுத்து கடையப்படுகின்ற பஞ்சு மேகத்தின் மென்மையான அசைவிற்கு ஒப்புமையாகிறது. வெண்மையான மேகத்தைப் பார்க்கும் போது பஞ்சு பரந்து செல்வதை போல இருந்ததனை, அகநானூறு,

**' கார்தலை மணந்த பைப்புதற் புரவின்**
**வில்லெறி பஞ்சின் வெண்தழை தவழும்**
**பெய்து புலம் திறந்த பொங்கல் வெண்மழை**
**எஃகுறு பஞ்சின் துய்ப்பட்டன்ன துவலை தூவல்'**

**(அகம் : 217)**

என்ற பாடலின் வாயிலாக அறியலாம்.

**நூல் நூற்கும் பெண்கள்:**

சங்ககால பெண்கள் சுத்தம் செய்யப்பட்டப் பஞ்சினைக் கொண்டு நூல் நூற்பதில் வல்லவராய் இருந்துள்ளனர். மேலும், கணவனை இழந்த பெண்கள் நூற்புத் தொழிலில் ஈடுபட்டுத் தங்கள் குடும்பத்தின் பொருளாதாரத் தேவையை நிறைவு செய்துள்ளனர். இதனை,

**'பருத்திப் பெண்டிர் பனுவல்'**

**(புறம் : 125)**

**'ஆளிற் பெண்டிர் தபளிற் செய்த நுணங்கு நண்பனுவல்"**

**(நற் : 353)**

என்னும் சங்கப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

**பாவோட்டுதல்:**

'பா' என்னும் சொல் (பரப்புதல்) பருத்தியினை சுத்தம் செய்து நூலாக நூற்பு செய்து, அதைக் கொண்டு, பெரிய இராட்டினத்தில் துணி நெய்வதற் கேற்றாற்போல் பாவோட்டப்படுகிறது.

பருத்தியினைச் சுத்தம் செய்த பின்னர், நூலாக நூற்பு செய்த நூலினைக் கொண்டு பெரிய இராட்டினத்தில் துணி நெய்வதற்குத் தகுந்தாற் போல் பாவோட்டப்படுகின்றது. இதனை எடுத்து நீளமாக விரித்து பசையிட்டு நன்கு மென்மையாகத் தேய்த்து நூலுக்கு மெருகு ஏற்றப்படுகின்றது.

நெசவு நெய்தலுக்கு ஏற்றபடி அமைத்தலை ‘பா’ எனச் சங்ககால மக்கள் அழைத்துள்ளனர். இதனைத் தற்காலத்தில் ‘பாவாற்றுதல்’ அல்லது ‘பாவோட்டுதல்’ என வழங்குகின்றனர். ‘பா’ என்னும் சொல் பாவுதல் (பரப்புதல்) என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. நெசவு செய்வதற்கு முன்பு பாவோட்டி, பாவினைப் பரப்பி வைக்கும் தன்மையினைச் சங்க இலக்கியப் பாடல்கள் எடுத்துக் காட்டியுள்ளன. சான்றாக,

**‘துகிலாய்ச் செய்கைப் பாவிரித்தன்ன**
**வெயிலவிர்வு நுடங்கும் வெவ்வங்கள்ளின்’**

**(அகம் : 293)**

என்ற பாடலின் வாயிலாக அறியலாம்.

**துணி நெய்தல் :**

சாயமிட்ட பாவினைக் கொண்டு பழங்கால மக்கள் துணி நெய்துள்ளனர். இது ஆடை உருவாக்கத்தின் நிலையாகும். இதற்காகத் தறி எனும் இயந்திரம் பயன்படுத்துகின்றது. தறியின் பல்வேறு பகுதிகளின் துணையினால் ஆடை உருவாகின்றது. நெசவு நெய்யப்படும் முறையில் தறி நெசவு, விரல் நெசவு, மேல்நோக்கி நெசவு, கீழ் நோக்கி நெசவு எனப் பலவகைகள் உள்ளன. தறியின் பகுதிகளாக ஆச்சு மரம், படுமரம், விழுது, கம்பு, குத்துக்கம்பி, கால்பலகை, ஓடம், ஊடைகுழல், பாவு போன்றவை அமைகின்றன. இவற்றுள் ஊடை குழலும், ஓடமும் நெய்யும் போது இணைத்த பாவு குறுக்காகச் செல்லும் தன்மையுடையது. சங்ககாலத்தில் அழகிய வண்ண வேலைப்பாடுகளுடன் துணிகளை நெய்துள்ளனர். என்பதை,

**‘புகாப் புகர் கொண்ட புன்பூங் கலிங்கமொடு’**

**(நற் : 90)**

**‘தேம்பாயுள்ள தேங்கமிழ் மடருளப்**
**பாம்புரியன்ன வடிவன காம்பின்**
**கழைபடு சொலியின் இழையணி வாரா’**

**(புறம் : 383)**

என்ற பாடலடிகள் எடுத்தியம்புகிறது. பாம்பின் தோல் போன்ற வடிவினையுடையதாக மூங்கில் குழலின் உள்ளகத்தேயுள்ள தோலைப் போன்று மெல்லியதாக அணியப்பட்ட இழையணி வரிசை அறியாத வகையில் அழகான வேலைப்பாடுகளுடன் கூடிய ஆடைகளை சங்க கால மக்கள் உடுத்தியுள்ளனர் என்பதை அறிந்துக் கொள்க முடிகிறது.

**நெய்த ஆடைகளை விற்றல்:**

சங்காலத்தில் நெசவுத் தொழிலில் ஈடுபட்ட மக்கள், நெய்த ஆடைகளை அங்காடியில் வைத்து விற்றனர். திரைகடலோடியும் திரவியம் தேடு என்ற பழமொழிக்கேற்ப உள்நாடுகளிலும் தாங்கள் நெய்த ஆடைகளை விற்று வந்தனர் என்பதனை,

**‘ தெண்டிரை அவிர்விரல் கடுப்ப**
**குறியவும் நெடியவும் மடிதரு விரித்து**
**சிறியரும் பெரியரும் கம்பியர் குழீஇ**
**நால்வேறு தெருவிலும் காலுற நிற்றர்’**

**(மதுரைக் காஞ்சி – 512)**

என்ற பாடலடிகள் மூலமாக ஆடைகள் விற்றதினை அறிந்துக் கொள்ளலாம்.

**முடிவுரை:**

சங்க காலத்திலேயே தமிழர்கள் பருத்தி பஞ்சி நூலாக திரித்து ஆடையாக உருவாக்கியதை சங்க பாடல்கள் எடுத்தியம்பியுள்ளது. கணவனை இழந்த மகளிர் தன் வாழ்க்கை தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நெசவுத் தொழில் முக்கியமானதாக இருந்திருக்கிறது என்பதனையும் அறிந்துக் கொள்ள முடிகிறது.

**துணை நூற்பட்டியல்**

1. புறநானூறு - புலவர்.அ.மாணிக்கனார்
2. அகநானூறு - முனைவர்.பெ.சுப்பிரமணியன்.
3. நற்றினை - பாலசுப்பிரமணியன்.கு
4. பத்துப்பாட்டு - கு.வெ.பாலசுப்பிரமணியன்



